செ.வெ. எண்: 343 நாள்: 14.06.2012

# பத்திரிக்கைச் செய்தி

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அரசு செயலாளர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் நெடுஞ்சாலைத்துறையின் சாலை மற்றும் பாலம் ஆகியவற்றின் நிலுவைப்பணிகள் குறித்த முன்னேற்றம் மற்றும் 2012–13ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தினை இன்று (14.06.2012) நடத்தினார்.

இக்கூட்டத்தில் சென்ற ஆண்டில் சாலைப்பணிகள் குறித்த காலத்தில் செய்து முடிக்கப்பட்டதை சுட்டிக்காட்டி நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளை அமைச்சர் அவர்கள் பாராட்டினார்.

அதேபோல் இவ்வருடமும் அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்கி சாலைகளை தரமாக செப்பனிடுவதற்கும், கோட்டப் பொறியாளர்கள் அவர்களுடைய எல்லைக்குட்பட்ட சாலைகளை ஆய்வு செய்து பேட்ஜ் ஒர்க்கை உடனுக்குடன் செய்து மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தடுக்கப்படவேண்டும் என்றும், சாலை மற்றும் பாலப்பணிகளுக்காக நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுத்தக்கூடாது என்றும், நீண்ட கால நிலுவையில் உள்ள நிலப்பிரச்சனையை அரசுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நெடுஞ்சாலைத்துறை சம்மந்தமான கோரிக்கையினை தெரிவிக்கும்போது அதன் விவரத்தை அமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்றும், தரமான சாலைகளை அமைப்பதற்கும், பழுதடைந்துள்ள சாலைகளை உடனுக்குடன் சீர்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**